உளி 8 | ஓசை 12 | ஜூன் 2025 | திங்களிதழ்

படைப்பு
சமூகத்தின் இணைப்பு

www.padaippu.com

# கல்வெட்டு

கவிதை மின்னிதழ்



அரசு பதிவு எண்: 521/2018

**நிறுவனர் & ஆசிரியர்:**
ஜின்னா அஸ்மி

**நிர்வாகக் குழு:**
சகா (சலீம் கான்)
ஜெ. ராஜா ஜெயகரன்

**ஆசிரியர் குழு:**
படைப்பு தேர்வுக்குழுமம்

**இதழ் உருவாக்க உதவி:**
பிரபுசங்கர் க
ஷெண்பா
தி.கலையரசி

**வடிவமைப்பு:**
தேவம். ஆரோன்

**இணையதள முகவரி:**
padaippu.com

**அலுவலக முகவரி:**
படைப்பு குழுமம்
8, மதுரை வீரன் நகர்,
கூத்தப்பாக்கம்,
கடலூர் 607 002

படைப்பு பிரைவேட் லிமிடெட்
3, தரைத்தளம், அஜந்தா டவர்ஸ்,
கார்ப்பரேஷன் காலனி தெரு,
கோடம்பாக்கம்,
சென்னை 600 024

admin@padaippu.com
+91 73388 97788

படைப்புகள் யாவும் முகநூல் படைப்புக்குழுவிலிருந்து தேர்வு செய்யப்பட்டவை.
இந்த மின்னிதழில் தங்களது படைப்புகள் வரவேண்டுமெனில் முகநூல் படைப்புக் குழுவில் இணைந்து படைப்புகளை பதிய வேண்டுகிறோம். மின்னஞ்சலில் அனுப்பப்படும் கவிதைகளை பிரசுரிக்க இயலாது.

மணிசங்கர் ..........04
நயினார் ..........04
ரிஸ்கா முக்தார் ..........05
சங்கரி சிவகணேசன் ..........06
செல்வி ஜெகன் ..........07
நிலாபாரதி ..........07
மணி அமரன் ..........08
மகேந்திரன் நவமணி ..........09
மா. காளிதாஸ் ..........10
செ.ரா. கிருஷ்ணகுமாரி ..........11
மெஹராஜ் பேகம் ..........12
அபூ சுகந்தன் ..........13
திவ்யா ஈசன் ..........14
கணியூர் பரூக் ..........14
கோவை புதியவன் ..........15
தனபாலன் தர்ஷன் ..........16
ஆ. சார்லஸ் ..........16
எ. சீனிவாச வரதன் ..........17
ஜேபி நீக்கிழார் ..........18
லாஸ்யா ..........18
சிவசபாபதி பழனிசாமி ..........19
தி. கலையரசி ..........20
த. ரவீந்திரன் ..........21
கா. வெங்கடேஸ்வரன் ..........21
சுப்பையா கந்தையா ..........21
நேசன் மகதி ..........22
வினோத் பரமானந்தன் ..........22
நேசன் ..........23
தங்கேஸ் ..........24
பாத்திமா சில்மியா ..........25
ஜனனி ..........26
ஆரூர். சிவ.மணிவேல் ..........26
ஐ. தர்மசிங் ..........27
ராணி கஸ்தூரி ..........27
ஆ. விஜயலெட்சுமி ..........28
அ. சீனிவாசன் ..........28
பாத்திமா சுமையா ..........29
மு. முபாரக் ..........30
சோ. ஸ்ரீதரன் ..........30
தா. பிரபுபாரதி ..........30
பன்னீர்செல்வம் ..........31
தமீம். அசாருதீன் ..........32
சஹாராக்கவிஞன் ..........32
கௌ. ஆனந்தபிரபு ..........33
க. புனிதன் ..........34
சாய் மீரா ..........35
இரா. மதிராஜ் ..........36
ஹிதாயத் ..........37
மகேஷ் சிபி ..........38
நேசங்களுடன் சத்யா ..........39



நான் முள் மரங்களை
போதிமரங்களாக்க
முயற்சிக்கிறேன்
மலர்களோ
என்னை கவிஞனாக்கி
திருப்பி...
அனுப்பிவிடுகின்றன...

• மணிசங்கர்

கோபத்தை குறைத்தேன்
பொறுமையை கையாண்டேன்
சகிப்புத் தன்மையை
வளர்த்துக் கொண்டேன்
தன்மானத்தை இழந்தேன்
சுயமரியாதையை தேடவில்லை
பணிவை வழக்கமாக்கினேன்
பாசாங்கை கொஞ்சம் பழக்கமாக்கினேன்
சில இடங்களில் காதுகளை மூடினேன்
சில நேரங்களில் வாய் மூடியும் இருந்தேன்
பல நாட்கள்
கண்டும் காணாதது போல் இருந்தேன்
இயல்பாக இருந்தது புன்னகைதான்
மற்றபடி நடிப்புதான்
மேலோங்கி இருந்தது என
மனசாட்சி புலம்பியது
நான் கவலைப்படவில்லை
என் திறமையின் வெளிப்பாடாக
இத்தனைக்குப் பிறகுதான்
நான் அன்பு காட்டுவதாக
ஒப்புக் கொண்டார்கள்

• நயினார்



நமக்கிடையில் மூன்றாம் நபரொருவர்
வருவதற்கு முன்
பின்னென
நம் வாழ்வினைப் பிரித்துக்கொள்ளலாமா
சகி

நமக்கிடையில்
பிறிதொருவர் வரும் வரையில் எல்லாம் சரியாகவே
இருந்தன இல்லையா

நமக்கான உரிமைகள்
நாம் சேமித்த நினைவுகள்
நமக்கே நமக்கான பொழுதுகள்
என
எல்லாம் சரியாகவே இருந்தன
இல்லையா

பின்
நமக்கிடையில்
மூன்றாம் நபரொருவர் நுழைந்து வெளியேறுகிறார்

அவர் இருப்பிற்கும்
இன்மைக்கும்
இடையில்
நமக்கான அன்பின் மலர்கள் வாடி உதிர்கின்றன
நமக்கிடையிலான அக்கறைகள் நீர்த்துப்போகின்றன
நாம் வரைந்து வைத்த அன்பின்
ஓவியங்களைக் கறையான்கள்
அரித்துக்கொண்டிருக்கின்றன

உண்மையில்
நம் இருவருக்கிடையில்
யாரோ ஒருவர் வந்து போனதற்கிடையில்
ஒருவருக்கொருவர் நாம்
எவ்வளவு
அந்நியமாகி
தூர நிற்கிறோம்
பார்

ஆயினும்
உண்மையில்
நமதிந்தப் பிரிவுக்கு
வெறுமனே ஒரு மூன்றாமவர்தான்
காரணமா
என்ன

இல்லை
இது
நம் அதீத எதிர்பார்ப்புகளால்
நிகழ்ந்தது
மூச்சடைத்த இறுகப்பற்றுதல்களால்
நிகழ்ந்தது
கண்மூடித்தனமான நம்பிக்கைகளால்
நிகழ்ந்தது

பின்னும்
நமக்கிடையில்
மூன்றாமவர் வரும் வரை செல்லப்பிள்ளையாய்
ஒரு நேசம்
மடியில் கிடந்து
தவழ்ந்ததுதான்
இல்லையா

இப்போது பார்
அது தெருவில்
யார் யார் காலிலோ
மிதிப்பட்டுக் கிடப்பதனை

• –ரிஸ்கா முக்தார்



ஒரு விதைக்குள்
உறங்கிக் கிடக்கும்
பெருமரத்தைப் பற்றி
வீசியெறிந்த கைகள்
உணர்வதில்லை..

அந்த விதைக்குள்
மௌனித்த காட்டை,
அதன் கிளைகளில்
இளைப்பாறும்
பறவைக் கூட்டை,
தன் கடைசில் எச்சத்திலும்
சுமக்கு பறவையின் மேன்மை
மனிதருக்கு வாய்ப்பதில்லை

எந்த நிராகரிப்பாலும்
நிராகரித்திட முடிவதில்லை
உயிர்ப்புள்ள விதைகளை..

• சங்கரி சிவகணேசன்

ஆழி முன் ஒத்திகையாய்
எப்போதும் புறக்கணிக்காத
புன்னகையோடு
ஆனந்தப்படுத்தியவர்கள்

குப்புறத்தள்ளியதில்
பிரளயத்தின் கடும்
வன்முறையாய்
வலியும் வேதனையும்
உடலில் விநோத நடனம் புரிகிறது

சிந்திக்க இயலா
பரிமாணமாய்
சூழ்ந்த துரோகத்தின்
கயமைத்தனத்தின் உக்கிர உச்சம் நடத்திய
சுயநலம் வெளிச்சமானதில்

என் உயிரணுக்கள்
ஆக்சிஜனேற்று
வலுவிலுக்கிறது
உணரும் தனிமை
நேரங்களில்
ரகசியம் பேசும்
நெருப்பாய்
விரும்பிய அன்பு
கிட்டாததில்
உடம்பல்ல மாறாய்
உள்ளம் பசலை பூக்கிறது.

பிறவித் துன்பங்களின்
தொடர்போ என்று
கடக்கிறேன்.
ஆனால்
ஒரு போதும் யாருக்கும்
துரோகியாக விரும்பாது நடக்கிறேன்

• செல்வி ஜெகன்



விளக்கை அணைத்தாலும்
போதாது....
கழற்றி வைத்து வா !
உன் கால்கொலுசையும்....
விழித்துக்கொள்ள போகிறது
நம் இரவு..!

• #நிலாபாரதி




யாரோ எழுதிய கவிதை

தமிழ்தானே தாய்மொழி
ஆங்கில கலப்பெதற்கு
சொன்ன தமிழ் பற்றாளருக்காக
ஒரு வரியை அழித்தாயிற்று

எதுகை மோனையோடு இருந்தால்
இன்னும் நன்றாக இருக்கும்
இலக்கணப் புலவரின் அறிவுரைக்கு
அப்படி இப்படி மாத்தியாயிற்று

இத்தனை வரிகள் எதற்கு
குறைத்தால் கவிதைக்கு நலம்
சொன்னவர் மரியாதைக்குரிய பெரியவர்
நான்கு வரிகளை  கொன்றாயிற்று

அந்த வரி கொஞ்சம் ஆபாசமாக இருக்கிறதே
ஆடையோடே பிறந்தவரின் அன்புக்கு
மாறென்று இருந்த வரியை
கச்சைக் கொண்டு மறைத்தாயிற்று
பின்நவீனம் புரியவில்லை இது ஒருவர்
கொஞ்சம் பின்னோக்கி ஓடினால்
மரபெல்லாம் இப்போதெதற்கு இது மற்றொருவர்
துவக்கம் சரியில்லை என ஒருவர்
முடிவு சரியில்லை என மற்றொருவர்

அவருக்காகவும் இவருக்காகவும்
எழுதி முடித்துப் பார்கிறேன்
இப்போது
யார் யாரோ எழுதியிருந்தார்கள்
எனது கவிதையை

இனி
இன்னொரு கவிதையை
எழுதும் முன்
பின்பக்கம் ரப்பர் வைத்த
இந்த பென்சிலை
தொலைத்து விட வேண்டும்

• மணி_அமரன்



குட்டியைக் கௌவிச் செல்லும்
பூனையின் இலாவகத்துடன்
இழைந்த உரையாடலில்
மனத்தை ஆற்றுப்படுத்தும்
மிருதுவான
ஒற்றைச்சொல்லால்
சமன்செய்யப்படுகின்றன
கடைசி சந்திப்பின்
நீள்மௌனங்கள்...

• மகேந்திரன் நவமணி

கண்ணீர் அஞ்சலி போஸ்டர்
வாரம் தவறாமல் ஒட்டப்படுகிறது
மதுக்கடை வாசலில்
கே.பாலன் வடக்கத்தியான் பட்டி

ஊதிய உயர்வுக்கென்று
உரிமையாய்
குரல் எழுப்ப முடியாத
அப்பாக்கள் தான்....
வட்டிக்காரனிடம் கைகட்டி
வசவு வாங்கும்
அப்பாக்கள் தான்....
மதுபானக் கடையின் வாசலில்
'கட்டிங்' யாசகம் கேட்டு
நிற்கும் அப்பாக்கள் தான்....
மகள்களின் தேசத்தில்
மகாராஜாக்களாக
வாளேந்தி உலா வருகிறார்கள்...!

கௌ.அஸ்வின் பிரபு

என்னிடம் இருந்த
சில சொற்களைக் கொண்டு
ஒரு பாடல் பாடினேன்.

அப்போது என் தலைவருடியது காற்று
குனிந்து என்னைப் பார்த்துக் கொண்டே
பறந்து சென்றது ஒரு பறவை.
மரக்கிளைகளுக்கிடையே புகுந்து
எட்டிப் பார்த்தது ஒளி.

சொற்களில் குரலில் ராகத்தில்
பிழை இருந்ததைப்
பொருட்படுத்தாத குயில்
என்னோடு சேர்ந்து இசைத்தது.

பாடலின் மையம்
காதலா பசியா தேடலா பிணக்கா வெற்றியா?
கொறிப்பதை நிறுத்திக் கேட்டது அணில்.

அப்போது ஒரு மழைத்துளி
என் மேலுதட்டில் விழுந்தது
காதலியின் முதல் முத்தம் போல்
அவ்வளவு தித்திப்பாக இருந்தது அது.

இத்தனை வண்ணங்களுடன்
என்னைச் சுற்றி வரும் வண்ணத்துப்பூச்சியே
மெதுவாக என் மேல் அமர்.

உன்னால் கூடுமெனில்
பாடலின் மகரந்தத்தை எடுத்துச் செல்
இதுவரை நீ காணாத பூந்தோட்டத்திற்கு.

• மா. காளிதாஸ்





நல்லெண்ணெய்யும்
பச்சை முட்டையும்
உளுந்து உருண்டைகளையும்
தந்தாள் அம்மா
நேற்று சமைந்த பெண்ணின்
எலும்பைப் பலப்படுத்த

பள்ளிக்குச் சென்றவளின்
பையில் கரித்துண்டையும்
கையில் கருப்புக் கயிறையும்
கட்டினாள் பாட்டி

மிளகாய்த்தூளும்
மிளகுத்தூளும் போதுமென்று
பொட்டலம் கட்டி எடுத்துக் கொண்டாள் அவள்

கண்ணாடி வளையலை
அழகுக்காகயின்றி
ஆயுதமாக அணிந்துக் கொண்டாள் அவள்

ஆடைக்கு காப்பூசி குத்திக் கொண்டவள் கைகளிலும்
வைத்திருக்கிறாள்
பேருந்தில் உரசும் குறிகளை குறிப்பார்த்து

இடுப்பெலும்பின் பலத்தின் கூடவே
மனதின் பலத்தையும் கூட்டிக் கொள்கிறாள் அவள்.

• செ.ரா.கிருஷ்ணகுமாரி



புவிக்கு
முதன் முதலில் வந்த
குழந்தையை போல
சத்தமிட்டு அழுகின்றது
மழை
பக்குவமடைந்த
ஞானியை போல
மௌனித்து செல்கிறது
நதி

- மெஹறாஜ் பேகம்



எது நான்,எதில் நாம்

என் கால் சுண்டு விரல் நுனியில் கிடக்கும்
லட்சக்கணக்கான செல்களில் ஒன்று
என்ன நினைத்துக் கொண்டிருக்கும்?

அது தனியாள் என்று தானே!

அதன் பிரபஞ்சம் எது?
அதற்கு யார் கடவுளாய் இருப்பார்கள்?
அது இவ்வளவு பெரிய
நான் என்ற என் உருவத்தின்
ஒரு பகுதிதான் என்று அதற்கு தெரியுமா?
அதன் உலகத்தின் நீள அகலம்
என்னவாய் இருக்கும்?

அவை அறிந்த தூரம் என்பது
என் காலோடு
விரல் இணைந்த தூரமாய் இருக்குமோ !
இன்னும் கண்டறியாத
எப்போதும் பார்க்க சாத்தியமில்லாத
என் கட்டைவிரலை
கடவுள் என்று நினைத்துக்கொண்டிருக்குமோ?

அப்படியென்றால்
நான் எந்த பெரிய உருவத்தின் ஒரு பகுதி?
நம்மை சுற்றி இருக்கும்
கோள்களும் நட்சத்திரங்களும்
எப்பெரும் உருவத்தினுள்
எதன் மீதி துகள்கள்?

அப்பெரும் உருவத்தை தாண்டிய
இன்னொரு உருவம்'
அவர்களின் உலகம் எப்படி இருக்கும்?
அது என்ன செய்துக்கொண்டிருக்கிறது?
அது வாழ்வதற்கு
நான் என்ன செய்துக்கொண்டிருக்கிறேன்?
நான் இருப்பதை
அது எப்போதாவது நினைவுக்கூறுமா?

எது என் பிரபஞ்சம்?
யார் என் கடவுள்?
எது நீ?
எது நான்?
எதில் நாம்?

• அபூ சுகந்தன்



ஜெயமாலா என்றொரு வலுவான கை

எழுந்து நடக்க முயற்சித்த போது
வீட்டில் உள்ளவர்கள்
இரண்டு கால்களையும்
உடைத்துப் போட்டிருந்தார்கள்.
எனக்கு நானே
மாவுக்கட்டுப் போட்டு
சரி செய்துக்கொண்டேன்...

திவ்யா விட்டுப்போன போது
வலது கை உடைந்துப் போனது
ஐஸ்வர்யா விட்டுப்போன போது
இடது கை உடைந்து போனது

ஆனால்
நான் முடமாகிவிடவில்லை
எனக்கு புதிய கைகள் முளைத்தன
அதிலொரு வலுவான கை ஜெயமாலா
மற்றபடி
இப்போது நான்
காளியின் கைகளைக் கொண்டுள்ளேன்

• திவ்யா ஈசன்

பிஞ்சு விரல்களைப் பிடித்து
உலகை காட்டினார் அப்பா...

முதிய கைகளைப் பிடித்து
முதியோர் இல்லத்தை
காட்டினான் மகன்...!

• கணியூர் பரூக்



அப்பாவின் சட்டைப் பையில்
காசு திருடும்போது
இருந்த தைரியம்
முதல் மாதச் சம்பளத்தில்
நூறு ரூபாய்
வைத்துப் பார்க்க ஆசைதான்
கைகள் நடுங்குகிறது

சிகரெட்டை
பின்னால் நான் மறைத்ததை
கவனித்த அப்பா
அமைதியாய்
கடந்து செல்லும்போது
சுட்டுக் கொண்டேன் நான்

நான் வாங்கிய
புது காரின் முன்னால்
தன் சைக்கிளின் கம்பீரத்தை
என்றும் விட்டுக் கொடுத்ததில்லை
அப்பா

கொடுத்துக் கொடுத்து
பழக்கப்பட்ட அப்பாவிற்கு
வாங்கிக் கொள்ளும் பழக்கம்
என்றுமே இல்லை
பரவாயில்லை அப்பா
அன்று தந்ததுபோல்
இன்றும் தாருங்கள்
உங்கள் வெறும் கைகளை

நான் கீழே விழுவதை
அப்பா விரும்புவார்
காயங்களையும்
வலியையும்
கடந்து செல்ல வேண்டுமென்பதை
கண்களிலேயே
காட்டி விடுவார்

வீடு
அமைதியாகும்போது
அப்பாவின் வருகை
உறுதி செய்யப்படும்
கம்பீரம் தாங்கும்
அமைதியாய்

வியர்வையில் நனைந்து
வரும்போதெல்லாம்
உழைப்பின் மணத்தோடு
அப்பா!

வார்த்தைகள்
அதிகம் இல்லா
வாழ்வியல் டிஸ்னரி
அப்பா!

• கோவை புதியவன்



நீங்காத நிழல்
கடன் பெற்று
கையறு நிலையிருக்கும்போது,
சொந்த பந்தங்கள்
சொல்லிக் கொள்ளாமல்,
விடைபெறுகின்றனர்.

கடவுளைத் தவிர்த்து
கூடவே பயணிக்கிறது,
எதையும் எதிர்பார்க்காத–என்
நிழல்.

• ஆ.சார்லஸ்

என் கனவுகளெல்லாம்
கனரக வாகனமாய்
தூரத்தில்...
என் வீட்டிற்கோ
ஒத்தையடி பாதை...!

• தனபாலன் தர்ஷன்



சாலை விரிவாக்கம்
தொடர்ந்து கொண்டிருக்கும்
இடம் பெயரும் வீடுகள்

குயிலோசை கேட்பதில்லை
எங்கும் இருக்கின்றன
மாடி வீடுகள்

குப்பை பொறுக்கும் சிறுவன்
கையில் கிடைத்ததும்
இசைக்கிறது மூங்கில்

பகைவர் வீட்டை
எட்டுப் பார்க்கிறது
படரும் கொடி

உச்சி வெயில்
நிழலைத் தருகிறது
புல் மேயும் மாடு

வற்றிய குளம்
தினம் கடந்து போகும்
பறவையின் நிழல்
விவசாயி உடலில்
இன்னும் இருக்கிறது
விற்ற மண் வாசம்

• எ.சீனிவாச வரதன்



அலைக்கு நடுவே
வலையை கிழித்துச் செல்கிறது
உறவு

அலைக்கு நடுவே
மலிவாகத் தெரிகிறது
உயிர்

அலைக்கு நடுவே
திசை மாறிச் செல்கிறது
காற்று

அலைக்கு நடுவே
பாய்ந்து வருகின்றன
குண்டுகள்

அலைக்கு நடுவே
இன்னும் கிடைக்கவில்லை
நண்பன்

அலைக்கு நடுவே
பயத்தை தருகிறது
வெளிச்சம்

• ஜேபி நீக்கிழார்

எரிந்த இரவுகளை
அணைத்த  முத்தமழையின் வழிந்தோடும்
ஆலாபனைக் குழைவுகளை
வேறுபடுத்திக்கொண்டும்
நடிப்பதாய் நடித்துக் கொண்டிருக்கும்
நடிகைக்குப்  பக்கம் பக்கமாய்
ஆராய்ச்சிக்  கட்டுரைகள் எழுதும்
உனக்கெங்கே கேட்கப்போகிறது
மௌனமாகி அழும்  என் கொலுசுகளின் விம்மல்

• லாஸ்யா



ஆயிரம் வருத்தங்கள்
வரிசை கட்டி நிற்க

ஏதோ ஒன்று
எப்போதாவது
மகிழ்வெனும்
மலராய் மலர்ந்து
விரைந்து உதிர்ந்திட

எப்போதும்
உள்ளே வருத்தமாய்
வெளியே புன்னகையாய்
நடிக்கின்றது மனது.

• சிவசபாபதி பழனிசாமி

## கண்ணாடி

கண்ணாடிக்கு
அதன்முன் நிற்கும் நான்
தற்கணத்தின் மனிதன்

அது என்னை
யாராக தரிசிக்கிறதென உணர்கிறேனோ
அதுவாக நான் இருக்கிறேன்

அதன் மெருகு தேயும்போது
பிரதிபலிப்பதில் பிறழ்கிறது
சில்லுகளாக உடையும் தருணத்தில்
பிம்பங்களும் சேர்ந்து
உடைந்து போகின்றன

கண்ணாடிக்கு
இருள் என்பதும் தியானம்

கண்ணாடியில்
ரூபத்தின் நிழல்
அரூபத்தில் படர்கிறது

நானும் கண்ணாடியும்
எதிரெதிரே சந்திக்கும் போது
வேறொரு நானாக
மாறுகிறேன்

ஆனால் அதனிடம்
'நான் 'அதீதமாக
நெருங்கினாலோ
விலகினாலோ
'என்னை'க் காண்பதில்
தடுமாறிக் கொண்டே இருக்கிறேன்

• தி.கலையரசி





முகம் பார்த்த மகிழ்வில்
திரைச்சீலை விலக்கியது
அலைப்பேசி..

• த. ரவீந்திரன்

கட்டிமுடித்த வீட்டில்
எட்டடிக்கு விரிசல்
எந்த நதியின் சாபமோ.

• கா.வெங்கடேஸ்வரன்.

எதிர்நிலை

குழந்தைகள் உள்ள வீடுகளில்
ஊர்ந்திடும் கம்பளிப்பூச்சிகளுக்கு
மரண தண்டனை தரப்படுவது
அதன் ஊறல் புத்திக்கு
அது அதிக பட்சமே...
பறக்கும் வண்ணத்துப்பூச்சியை
மனம் இலயித்து
பார்த்து ரசிக்கும் இரசனைக்கார
மனிதக்கூட்டத்தில்தான்
இந்த நீதிபதிகள்

• சுப்பையா கந்தையா



## செக்குமாடு

உன்னை நேசிப்பதற்கு
மட்டுமே என்னை
பழக்கப்படுத்தி வைத்திருக்கிறாய் அதைத்தாண்டி
பெரிதாக ஒன்றும் எனக்குத் தெரியாது
என்ன விதைத்தாலும் நட்டம் வந்தபோதும்
அதையே கட்டிக்கொண்டு அழும்
விவசாயியைப்போல...

• நேசன் மகதி

ஒரு
நிராகரிப்பை,
கோபத்தை,
இயலாமையை
வெற்றிக்கு மிக
அருகில் போய்
தோற்றதை,
பகிர்ந்து கொள்ள
எனக்கு நானே
போதுமானவனாக இருக்கிறேன்..

இந்த அன்பையும்,
ஈரம் படர்ந்த முத்தத்தையும்,
பகிர்ந்து கொள்ளத்தான்
உன்னை...
உன்னை மட்டுமே
தேடுகிறதென் மனது

• வினோத் பரமானந்தன்



சித்தார்த்தன்கள் கையில்
புகையும் சிகரெட்
துப்பிய எச்சிலில்
பான்பராக் வாசம்
புடைத்திருந்த கீழுதட்டுக்குள்
நசுக்கி ஒதுக்கிய புகையிலை
நெருங்கிப் பேசுகையில்
நேற்றைய சாராய நெடி
ஒளிரும் தொடுதிரையில்
சன்னிலியோன் புன்னகை

பொறுத்துப் பொறுத்து பார்த்த
போதிமரங்கள்
விறகு லாரிகளில் ஏறும் முன்
கடைசியாய்ச் சொன்னது
இன்னொரு புத்தன்
இனியும் வரப்போவதில்லை

• நேசன்.



எதன் பொருட்டு
பெரும் பாறைகளாக
மாறிக் கொண்டிருக்கும்
இதயங்களுக்குள்ளிருந்து
பீறிட்ட நீரூற்றுகள் இப்போது
கற்களின் மூலக் கூறுகளை
வாங்கிக் கொண்டு
திட வடிவமெடுத்துக்
கொண்டிருக்கின்றன

எல்லோரிடமும் இரவல் கேட்டு
ஏமாந்து போனவன் தான்
இப்போது
உன்னிடம் வந்திருக்கிறேன்

பெரும் மழை யெல்லாம் வேண்டாம்
ஒரே ஒரு துளி கூட போதும்
களங்கமற்ற பரிசுத்தமான
ஒரு திரவ துளி

ஒரு மென் முத்தமாக இருக்கலாம்
சிறிய தழுவலாக
அல்லது ஜீவனை மேவும்
ஒரே ஒரு பார்வையாகவும் கூட

எதன் பொருட்டு நாம்
வாழ்கிறோம் என்பதை
அர்த்தப் படுத்திக் கொள்ளவும்
எதிர் பார்ப்பில்லாத நேசம்
செத்து விடவில்லை என்பதை
ருசுப் படுத்திக் கொள்ளவும்
ஒரே ஒரு துளி கூட போதும் பிறகு

பிறகு என்றென்றைக்கும்
உன்னிடமிருந்து
விடை பெற்று விடுவேன்

• தங்கேஸ்



அந்த வில்லைகளின் கரைசலைத்
தொண்டைக் குழிக்குள்
திணித்துக் கொண்டிருந்தார்கள்...

இனிப்பதாய்க் கூறி அதன்
இயல்பை
மறைத்துக் கொண்டிருந்தார்கள்...

ஆனால் சர்க்கரையற்ற
அந்தக் கசப்பில்
ஆகப்பெரும் அக்கறை இருந்தது...

ஒப்பனையில்லாக்
கரிசனை இருந்தது...

நலம்பெற வேண்டிடும்
நல்லெண்ணம் இருந்தது...

எந்தன் அதிகபட்சப்
பிரார்த்தனையோ

ஒன்றே ஒன்று தான்...
பருவங்களோடு
பக்குவம் எய்திட வேண்டும்
அந்தப் பால்யம்...

காருண்யம்
கலந்திருக்கும் கசப்புக்கள்
நிஜமாய் கசக்காது...

சர்க்கரையின் சாயலில்
இருக்கின்ற எல்லாமே
நிஜமாய் இனிக்காது...

பருவங்களோடு
பக்குவம் எய்திட வேண்டும்
அந்தப் பால்யம்...

• பாத்திமா சில்மியா



என் வெறுமையின் வயலில்
அன்பைப் பாய்ச்ச மறந்து
கோப விதைகளைத் தூவிப்போகிறது உன் மௌனம்...

விளைவது அனைத்தும்
வீண் களைகளாகும்...

புரிதல் இல்லையேல்
புதினா வாசமும் பூண்டு வாசமும்
புரியாத நிலைதானே

என் காதல் கழனியில்
கலைந்த மேகமென
மகிழ்வு மழையின்றி
வெறுமையில் வெடித்து கிடக்கிறது மனது

சுற்ற மறந்த கடிகார முட்களாய்
என் காலம் நகரமறுக்கின்றது

கொட்டும் மழையாக
வார்த்தைகள் இல்லாவிட்டாலும்

சிறு தூறலென
ஒற்றைக்
குறுஞ்செய்தியிலாவது குளிர்வித்திருக்கலாம் ....!!

• ஜனனி

நீண்ட வருடங்கள் கழித்து பரணியில் இருந்த ட்ரங்கு
பெட்டியை திறக்கும் வாய்ப்பு கிடைத்தது,
அதில் பாதி கரையான் அரித்த நிலையில் என்
எழாம் வகுப்பு சூழ்நிலையியல் புத்தகம் பெருமூச்சி
விட்டுக்கொண்டிருந்தது,
அதை மெல்ல புரட்ட மெல்லிய மயிலிறகு ஒன்று
கணமாய் சுமந்து கொண்டு இருந்தது அவளின்
நினைவுகளை....

• ஆரூர்.சிவ.மணிவேல்



மனங்களை
மயங்க வைக்கும்
புல்லாங்குழலின் பின்னால்
நெருப்பு சுட்ட
வடுக்கள் இருக்கின்றன

மனங்கவரும்
கூழாங்கல்லின்
அழகின் பின்னால்
வலி நிறைந்த
அடிகள் இருக்கின்றன

கைகூப்பி
வணங்க வைக்கும்
சிற்பத்தின் பின்னால்
உளி துளைத்த
வேதனைகள் இருக்கின்றன

சாதனை
படைப்பவனுக்கு
தடைக்கற்கள்
படிக்கட்டுகள்
கரம் நீட்டுபவை
காயங்கள்.

• ஐ.தர்மசிங்

அந்தத்திருமண மண்டபத்தையே கல
கலப்பாக்கிக்கொண்டிருந்தாள் அக்கா.....
ஏதாவது திருமணம் என்றால்
அக்காவுக்குப்புதிய பட்டுப்புடவை
எடுத்தாக வேண்டும்..
தலை நிறைந்து வழியும்
மல்லிகைச்சரம்...
கழுத்தை நிறைக்கும் நகைகள்..
அவள் இருக்குமிடமே
அத்தனை ஆரவாரத்திலிருக்கும்...
மாமா தாமதமாய் வந்தார்
மாமாவுடன் உணவருந்த அமர்ந்திருந்த அக்காவின்
முகம் களையிழந்திருந்தது...
அக்காவிற்குப்பேரக்குழந்தை
பிறந்து ஒரு வருடமாகிறது....
இப்போதுவரை அவளின் சிரிப்பும்
ஆரவாரிப்பும் மாமாவின்
ஒரே ஒரு முறைப்பில் காணாமல்தான்
போய்விடுகிறது..

• ராணி கஸ்தூரி



பிறந்த குழந்தையின்
விழி மூடிய புன்னகையில்
தெரிந்தாய் நீ...

மலரும் மொட்டுகளின்
வாசத்தில் தெரிந்தாய் நீ...

வெடித்து சிதறிய
வறண்ட நிலத்தில்
விழும் முதல்
மழைத்துளியில்
தெரிந்தாய் நீ...

முளை விடும் விதையில்
கீறி வரும் துளிரில்
தெரிந்தாய் நீ...

தொலைத்தது கிடைத்த
பெரு மகிழ்வில்
கண் சிந்திய தூறலின்
முதல் முத்தில்
தெரிந்தாய் நீ...

அதியன்பின் அதீதத்தில்
அழகாய் வெளிப்பட்ட
முத்தத்தின் முதல்
சத்தத்தில்
தெரிந்தாய் நீ...

இழப்பை தாங்க
முடியாமல் விடை பெற்ற
கடைசி மூச்சிலும்
தெரிந்தாய் நீ...
நீ ... நீ மட்டும்!

• ஆ.விஜயலெட்சுமி

உனக்கென்ன
கப்பல் பொம்மையை
பரிசளித்துவிட்டாய்.

கடல் பொம்மையைத்தேடி
அலையோ அலையென
அலைந்துகொண்டிருக்கின்றேன்!

• அ.சீனிவாசன்



எதுவரை வாழ்க்கை அழைக்கிறதோ
அதுவரை தொடருமிந்த பயணங்கள்

எதிர்பாராத வருத்தங்கள்
எதிர்பாராத திருப்பங்கள்

நிலைத்திராத இன்பங்கள்
நினைத்திராத துன்பங்கள்

கறையானாய் சிந்தனைகளை
அரித்துப் போகும் நினைவுகள்
இருந்தாலும் வளமாகவே
இருக்கும் அறிவின் விழுதுகள்

புரியாமல் மனதோடு கலவரங்கள்
புரிந்தால் சரியாகும் நிலவரங்கள்

நடந்து செல்லத் தான் பாதைகள்
கடந்து செல்கிறேன் ஒருபோதும்
மனதோடு இல்லை உபாதைகள்

• பாத்திமா சுமையா



எல்லா
பலூன்களுக்குமிருக்கிறது...
ஏதோ
ஒரு குழந்தையின்
முகச்சாயல்!

• மு.முபாரக்

இடியுடன் மழை
நஷ்டத்தில் நடுங்குகிறான்
குளிர்பான வியாபாரி

• சோ. ஸ்ரீதரன்

தோண்டப்பட்ட குழியில்/
மரக்கன்று நடுவதற்குள்/
விழுந்து கிடக்கும் நிழல்.

• தா.பிரபுபாரதி



ஆற்றுப்படுத்துகிறேன் என்னை....

இறுக்கமாக பூட்டிய
அறைக்குள் என்னை தனித்து விடுகிறேன்.... ஊசி
முனையளவு துவாரம் வழியாக நான் வெளியே வர
வேண்டும்....

நானும் காற்றும்
இருட்டும் இருக்கும் தனி அறை....
இரண்டையும் விட்டுவிட்டு தனியே
நான் மட்டும் வெளியில் வர விருப்பமில்லை....

அந்த துவாரம் வழியாக
மனதை மட்டும் அனுப்பி வைக்கிறேன்..
என்னுடைய எல்லா நினைவுகளுக்கும்
உரிமை அதற்கு தான்....

இந்த உலகம்
விசாலமானது என்பது எனக்கு தெரியும்....
தேர்ந்த கணிப்புக்குள் வர முடியாதவர்கள் மனிதர்கள்
மட்டுமே....

நேரமும் காலமும் வந்தால்
எல்லாம் சரியாகும் என்றார்கள்... அது எந்த
நேரம் எந்த காலம் என்பதை மறை முகமாகவே
வைத்திருக்கிறார்கள்....

எதை விட்டாலும்
மனதை மட்டும் விட்டு விட கூடாதென்ற பழமொழி
உறுத்திக் கொண்டே இருக்கிறது....

• பன்னீர்செல்வம்



## வேடதாரி

உள்ளம் ஒரு ஓநாய்

வீட்டு நாயைப்போல்
வேடமிடும்

குரைத்தும் வாலாட்டியும்
தான் நாய் என்பதை
தானும் நம்பி மற்றவர்களையும்
நம்ப வைக்க ...பாவம்.!
அதன் பாடு சொல்லி மாளாது!

தனிமையில் அவ்வப்போது
வேடம் கலைத்து சுயத்தை
தொட்டுப்பார்க்கும்!
சிலது சாகும் முன்
சுயத்தை கலைத்து
நன்றியுள்ள நாய்களாக
பாவமன்னிப்பு பெறும்!

காலம் காலமாய்
ஓநாய்களின் மரணங்களுக்கு
அழுத கதைதான்
அதிகம்!

• தமீம்.அசாருதீன்

ஒரு இறகு உதிர்ந்ததால்
இனி பறவை பறக்காதென்று
நினைப்பதால்
பறவைக்கு என்ன நஷ்டம்...

• சஹாராக்கவிஞன்



நான் முதலில்
காயங்களுக்கு
மருந்திடக்
கற்றுக் கொண்டேன்
பிறகுதான்
காதலிக்க
தொடங்கினேன்..

கோ. சிவா தமிழ்.

மண்கலயத்தில்
அப்பாவை அடைத்துப்
பெருங்குவளையென
சிறுத்துக்கிடந்த ஆற்றில்
கரைத்தோம்.
சிரமப்பட்டு சொர்க்கம் புகுந்த
அப்பா பரவாயில்லை.
என்னைக் கரைக்கும் வரை
ஆறு பிழைத்திருக்குமா
என்பதே பெருந்துயராக
இருக்கிறது.

• கௌ. ஆனந்தபிரபு



அழகான தேநீர் கோப்பை
விரல் நகத்தை ஒழுங்கு படுத்தும்
சின்ன ரம்பம் கொண்ட
நகவெட்டி
திருவிழாவை அச்சடித்த
பருத்தி புடவை
புத்தர் சிலை
வாழை நார் பை
ஒரு போன்சாய் மூங்கில்
மல்லி பூ வாசனை குப்பி
சமையல் கலை கோலம் புத்தகம்
கவிதை புத்தகம்
அலமாரி தொப்பி
பூனைக் குட்டி
..... இத்யாதி எல்லாமே பறவை
வெளியில் இருந்து கொண்டு வந்து
கூடு செய்வது போல் வீடு செய்கிறாள் யசோதரா
வீட்டில் இருந்து வெளியேறுவதை
ஞானம் இன்பம் என புரிந்து கொள்கிறான்
புத்தன்

• க. புனிதன்



தூரத்து வானிருந்து
கழன்று விழுந்த
ஓர் நட்சத்திரத்தை
கையிலெடுத்துக்கொண்டு
கட உள்ளிடம்
சென்ற போது
கடவுள் அதையோர்
மகுடமெனத் தரிக்கச் சொல்ல
அதை அவரிடம்
கையளித்த பின்
கேட்டு வைத்தேன்

நீங்களென்னை
ஓர் பிரபஞ்சமெனப் பரிணமிக்க
வைத்துவிட்டபின்
இந்த மகுடத்தின் பயன் என்ன?

நானோ பெருஞ்சுழியம்
இதை எங்கு கொண்டு பொருத்துவது?

வேண்டுமாயின் சிறு கருந்துளை
கையளிப்பின்
அத்துளை மகுடம் எனை
விழுங்கக்கூடும்
அப்படியல்லாது போயின்
இம்மகுடத்தினால் ஆகும் பயன் என்?

கடவுள் புன்னகைக்கிறார்
தூரமாய் ஓர்
கருந்துளை கீழே விழுகிற
சத்தம் கேட்கிறது

• சாய் மீரா




• வானக்குடையை
ஒற்றை நூலில்
கை விரல்நுனியில்
பிடித்துக்கொண்டு
ஓடி வருகிறாள்
அவளோடு கூடவே வருகிறது வானம்.!

கந்தலான
பாவாடை சட்டையில்
பட்டம் விட்ட சிறுமிக்கு
வசப்படுகிறது வானம்.!

• புகழேந்தி சரவணன்

பனியன் முழுவதும் கிழிசல்
நூல் மூட்டைச் சுமக்கும்
தொழிலாளி !

• இரா. மதிராஜ்



கடவுளாய் இருப்பதொன்றும் அத்துனை
கடினமில்லை

காரியமின்றி நீங்கள் அழைக்கப்படவோ
அலங்கரிக்கப்படவோ மாட்டீர்கள்

உங்களுக்குச் செலுத்தப்படும் நன்றியைக் கூட
நீங்கள் பெரிதாய்க் கண்டுகொள்ள மாட்டீர்கள்

மயிரைத் தவிர வேறென்ன பெரிதாய் இவர்களின்
நேர்ச்சை இருந்து விடப் போகிறது

களவு குறித்த கவலை வேண்டாம் கண்காணிப்புக்
கேமிராக்கள் வந்து விட்டன

தேராய் இருப்பதை மட்டும் கொஞ்சம் யோசித்துக்
கொள்ளுங்கள்

கடவுளையே சுமந்து நீங்கள் நகர்வலம் வந்தாலும்
அந்த நேரத்திற்கு மட்டும் தான் உங்களுக்கு
அலங்காரம்

அர்ச்சிக்கப் படுவதில் சகித்துக் கொள்ள பெரிதாய்
எதுவும் இருக்காது
தெருவில் நிறுத்தப் படும் போது தான் கொஞ்சம்
வலிக்கும்.

• ஹிதாயத்



தாயின் விரல் பிடித்து
சாலை கடக்கும் பாப்பா
எதிர் வரும்
வாகனங்களை நோக்கி
கை நீட்டுகிறாள்
அது இளவரசியொருத்தி கட்டளையிடும் பாவனை
இப்போது சட்டென வேகம் குறைத்து
கைகளைக் கட்டி
பவ்யமாய் நிற்க வேண்டியது
வாகனங்களுக்கு கட்டாயமாகிறது

• மகேஷ் சிபி



அன்பு மகனுக்கு!

வாழ்க்கை என்னை
எத்தனை புரட்டிப் போட்டாலும்
நீ மட்டும் மகனே
என்னை நேசிக்கிறாய்!
நீ மட்டும்தான் என்னை நேசிக்கிறாய்!
இரவெல்லாம் எனக்காக
விழித்திருக்கிறாய்!
அப்பா என்றழைக்க மாட்டாய்
அம்மாவுக்கே அலைபேசி அழைப்பாய்!
ஏக்கத்தோடு காத்திருந்து விட்டு
விலகிச் செல்வேன் நான்!!
ஆனாலும் ஓர்நாள்
நீங்கள் என்னைப்
புரிந்து கொள்வீர்கள் என்ற
நம்பிக்கை எனக்குண்டு!
அது என் மீதான நம்பிக்கை அல்ல
உங்கள் மீதான நம்பிக்கை!

• நேசங்களுடன் சத்யா

படைப்பு
சமூகத்தின் இணைப்பு

# சிறை வாசிகளுக்கு

# புத்தக தானம் செய்வீர்...!



"ஒரு எழுத்து மனிதனின் வாழ்வை மாற்றி அமைக்கும் என்ற உயரியஎண்ணத்தோடு புத்தகங்களை திரட்டிக் கொண்டிருக்கும் சிறைத்துறையின்ஒப்புதலோடு இலக்கிய படைப்பு குழுமம் தமிழ்நாட்டில் உள்ள அனைத்துசிறைச்சாலை நூலகங்களுக்கும் நூல்களை சேகரித்துக்கொண்டிருக்கிறது."

புத்தகங்கள் அனுப்ப வேண்டிய முகவரி


இலக்கிய படைப்பு குழுமம்

3, அஜந்தா டவர்ஸ், தரைத்தனம், கார்ப்பரேஷன் காலனி தெரு.கோடம்பாக்கம், சென்னை 600 024. Ph: +91 73388 97788